உ

சிவமயம்

திருக்குற்றாலம்

தல வரலாறு

திருக்குற்றாலநாதசுவாமி கோயில் முன்னாள் ஆட்சித் தர்மகர்த்தர்

அட்வகேட். A. C. ஷண்முகநயினார் பி. ஏ., பி. எல்.,

எழுதியது

கோயில் வெளியீடு.

1977

rights reserved] [விலை ரூ 1-75 பை

முதற் பதிப்பு	1943	ஐந்தாம் பதிப்பு	195
இரண்டாம் பதிப்பு	1944	ஆறுவது பதிப்பு	196
மூன்றும் பதிப்பு	1946	ஏழாம் பதிப்பு	196
நான்காம் பதிப்பு	1951	எட்டாம் பதிப்பு	197

நிர்வாகம் தமிழக அரசு
(1977)

மாண்புமிகு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்,
தமிழக முதலமைச்சர் மற்றும்
அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர்,
சென்னை - 600 009.

உயர்திரு எம். கே. பாலசுப்பிரமணியம்
ஐ. ஏ. எஸ். அவர்கள்
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை - 600 034.

உயர்திரு எஸ். கோபாலகிருஷ்ணன்
பி. எஸ்ஸி., அவர்கள்
துணை ஆணையாளர்.
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
திருநெல்வேலி - 627 011

டி. முனியப்பன் B. A
செயல் அலுவலர்.

உ

சிவமயம்

உள்ளடக்கம்.

[பக்கம்]

தோற்றுவாய்	...	1— 2
தல வளங்கள்	...	2—17
தல வசதிகள்	...	17—21
தலப் பெருமை	...	21—25
தலக் கோயில்கள்	...	25—39
தலப் பெயர்கள்	...	39—43
புராண வரலாறு	...	43--54
தலத் தொன்மை	...	54—55
கல் வெட்டுகள்	...	55—63
திருப்பணி	...	63—70
விழாக்கள்	...	70—73
நிதியும் நிலமும்	...	74—75
கட்டளைகள்	...	76—77
நிர்வாகம்	...	77—80
இலக்கியம்	...	81—89
பக்க தலங்கள்	...	89—94
தலப் பதிகங்களும், பாக்களும்	...	95-102

தலம் :	திருக்குற்றாலம்
மூர்த்தி:	திருக்குற்றாலநாதர் குழல்வாய்மொழியம்மை
தீர்த்தம் :	சிவமது கங்கை, வடவருவி, சித்ரா நதி
உற்சவ மூர்த்தி :	சோமாஸ்கந்தர்
ஆகமம் :	மகுடாகமம்
சபை :	பஞ்ச சபைகளில் ஒன்றாகிய சித்திர சபை
தனிச் சிறப்பு :	விழாக் காலங்களில் நடராஜ மூர்த்திக்குத் தாண்டவ தீப ஆராதனை பராசக்தி பீடம்
கோயில் அமைப்பு :	சங்க வடிவம்
பதிகம் அருளியது :	திருஞானசம்பந்தர் (தலப்பதிகம் குறும்பலாப் பதிகம்)
தொன்மை :	2000 ஆண்டுகளுக்கு முன்
தலபுராண ஆசிரியர் :	மேலகரம் மகாகவி திரிகூடராஜப்பக் கவிராயர்
கடல் மட்டம் :	550 அடிக்குமேல்
வடவருவி உயரம் :	288 அடி

முகவுரை.

டி. கே. சிதம்பரநாத முதலியார், திருக்குற்ருலம்.
திருநெல்வேலி ஜில்லா.

சென்ற முப்பது வருஷங்களாக நம்முடைய குற்ருலத்துக்கு ஏராளமான பேர்கள் வருகிருர்கள். சென்னையிலிருந்தும், அதற்கப்பாலுள்ள இடங்களிலிருந்தும் வருகிருர்கள் வந்தவுடன் எத்தனையோ கேள்விகளைக் கேட்கிருர்கள் பூர்வ சரித்திரம் என்ன? சுவாமி பேர் என்ன? அம்பாள் பேர் என்ன? சுற்றுத் தேவதைகள் என்ன? காட்சிக்கான இடங்கள் என்ன என்ன? என்றெல்லாம் கேட்கிருர்கள். கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிப்பது கஷ்டம். யாருக்குமே கஷ்டந்தான்.

எல்லா விஷயங்களையும் பல திறப்பட்ட வகையில் ஆராய்ந்து நல்ல முறையில் கோவை செய்து புஸ்தகரூபமாக அட்வொகேட். ஏ. ஸி. சண்முக நயினர் பிள்ளையவர்கள் நமக்குத் தந்திருக்கிருர்கள். நயம்பட எழுதிய புஸ்தகம் தூரத்திலிருந்து வந்தவர்களுக்கோ புஸ்தகம் அனுபவிக்கத்தக்கதாய் இருக்கும். குற்ருலத்தை யொட்டி வசிக்கிறவர்களுக்கோ (ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர்) எல்லாருக்கும் ஒரே ரஸமாயிருக்கும் வர்ணனைகளும் சரித்திரக் குறிப்புகளும் அடிக்கடி பார்த்து அனுபவிக்கக் கூடியவைகள். தமிழுக்கும், தமிழ் நாட்டினருக்கும் அருமையான தொண்டு புரிந்திருக்கிருர்கள் பிள்ளையவர்கள்.

வரலாறு புஸ்தகம் மூலமாகவும், சமய சம்பந்தமான பாசுரங்களை சுவரில் எழுதுவது காரணமாகவும் வேறு பல கோயில்கள்போல் திருக்குற்றாலநாதர் கோயிலும் அபூர்வமான விளக்கம் பெற்றிருக்கிறது இந்த விளக்கம் பற்றி ஹிந்து சமய அறநிலையப் பாதுகாப்பாளர்களுக்கும் திருக்குற்றாலநாதர் தேவஸ்தான தர்மகர்த்தர்களுக்கும் நாம் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறோம் இந்தத் துறையில் முனைந்து தொண்டாற்றும் கமிஷனர் ராவ்பகதூர் ஸி. எம். ராமச்சந்திரம் செட்டியார் அவர்களுக்கு பக்தர்களது மனமார்ந்த நன்றி உரித்தாயிருக்கிறது.

(ஒப்பம்) டி. கே. சிதம்பரநாத முதலியார்,
28—5—'43.

பதிப்புரை.

இப்புத்தகம் "திருக்குற்றாலத் தலவரலாற்றின்" எட்டாவது பதிப்பு திருக்குற்றாலத்தைப் பற்றிய விவரங்களெல்லாம் அறிந்துகொள்ள இங்கு வருகின்ற பொதுமக்களனைவரும் விரும்புகிறார்கள். இவர்கள் விருப்பத்தை இப்புத்தகம் நிறைவேற்றுமென்று நம்புகிறோம். புத்தகம் சிறிதாயினும் அதில் இவ்வூரைப் பற்றிய பலதிறப்பட்ட விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கோயில் வாலாறு மட்டுமன்றி ஆரோக்கியம், இயற்கை வனப்பு, தட்பவெப்ப நிலைமை, வசதிகள், குற்றாலத்தைப் பற்றிய இலக்கியம் முதலியவைகளைப் பற்றியும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இப் புத்தகத்தைப் படித்து யாவரும் நல்ல பயனடைய வேண்டுமென்ற நோக்குடன் விலையைக் குறைத்திருக்கின்றோம்.

திருக்குற்றாலம் அகில இந்திய புகழ்பெற்று வருவதால் அதைப்பற்றி யாவரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் காசி, ராமேஸ்வரம், போன்ற சில ஊர்கள் உலகப்புகழ்வாய்ந்த க்ஷேத்ரமாயிருக்கலாம் உதகமண்டலம், சிம்லா போன்ற சில ஊர்கள் இயற்கை வனப்பு நிரம்பிய ஆரோக்கிய தலமாயிருக்கலாம்: இந்த ஊர்களுக்கு யாவரும் பணவசதியின்றி எளிதாய்ப் போய்வர முடியாது. ஆனால் திருக்குற்றாலத்திலோ தலப்பெருமை தவிர அருவியிற் குளிப்பதற்குரிய வசதி, ஆரோக்கியம், முதலியன பெற்று அனுபவிக்கலாம். சுற்றிலும் இயற்கை அன்னையின் அழகைக் கண்டுகளிக்கலாம். விசேட ஆடைகள், வாகனங்கள், ஆடம்பரங்கள்,

செலவுகள் இல்லாமல் நாம் நம்முடைய இல்லங்களில் வாழ்வதுபோலவே செல்வர் ஏழை யாவரும் ஓர் இனிமையுடன் வாழலாம்

குற்றாலத்தில் தேவஸ்தானத்திலிருந்து பொது ஜனங்களின் சௌகரியத்தை முன்னிட்டு கோவில் சமீபம் சன்னதியில் ஓர் கல்யாண மண்டபம் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்தலத்தைப்பற்றிய புராணம், குறவஞ்சி, மாலை, ஊடல், யமகவந்தாதி, உலா, சிலேடை வெண்பா, பரம்பொருள்மாலை, திருக்குற்றாலக் கோவை எளிய விலைக்கு கோயில் அலுவலகத்தில் கிடைக்கும்.

T முனியப்பன், B. A.,
செயல் அலுவலர்.

14—12—'77.

உ
சிவமயம்

திருக்குற்றாலத் தல வரலாறு.

வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டியாழ் செய்குற்றாலம்
அம்பானெய்யோ டாடலமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள்

— திருஞானசம்பந்தர்,

சீர்மன்னு செல்வக் குடிமல்கு சிறப்பினோங்குங்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி மாடவைப்பு
நார்மன்னு சிந்தைப் பலநற்றுறை மாந்தர்போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது பாண்டிநாடு

— திருத்தொண்டர் புராணம்.

தோற்றுவாய்.

தெய்வமணக்குஞ் செய்யுளியற்றுஞ் சேக்கிழார் பெருமானாற் போற்றப்பட்ட இப்புண்ணிய நாடாகிய பாண்டிய நாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் பதினான்கினும் மிகத்தொன்மையினாலும், தலம் தீர்த்தம் மூர்த்தி விஷேடத்தாலும், இயற்கை அன்னையின் எழில் நலங்களாலும், வந்து உறைபவர்களுக்கு உடல் நலம் பேணி மன நலம் பாலிக்கும் பான்மையினாலுஞ் சிறந்து விளங்குவது திருக்குற்றாலம். இத்தலம் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டாரத்தில் தென்காசி ஊருக்குத் தென் மேற்கே $3\frac{1}{2}$-மைல் தூரத்திலுள்ள மேற்குத்தொடர்ச்சி மலையினடியிலுள்ளது. திருநெல்வேலி - திருவனந்தபுரம் ரயில்பாதையும், விருதுநகர்-தென்காசி குறுக்குபாதையுஞ்

சந்திக்கின்ற தென்காசி ரயில் நிலையத்திலிருந்து தென் மேற்கே இருக்கின்ற இத்தலத்திற்கு நல்ல கற்பாதை களுண்டு. வடக்கே மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் இராஜ பாளையம், சிவகிரி, புளியன்குடி முதலிய ஊர்களிலிருந்தும் கிழக்கே திருநெல்வேலி, திருச்செந்தூர் முதலிய தலங் களிலிருந்தும், தெற்கே அம்பாசமுத்திரம், பாவநாசம் முதலிய இடங்களிலிருந்தும், மேற்கே செங்கோட்டை, கேரள நாட்டைச் சேர்ந்த கொல்லம் முதலிய இடங்களி லிருந்தும் நல்ல கற்பாதைகள் வந்து சேர்கின்றன.

தென்காசியிலிருந்து இத் தலத்துக்கு வருகின்ற கற்பாதைகளிலெல்லாம் இருபுறமும் மரங்கள் அணி யணியாய் நின்று கதிரவன் கிரணங்கள் தெரியாமல் நிழல் கொடுக்கும் திருக்குற்றாலத்திற்குச் சமீபமாக ஐந்து மைல் சுற்றளவுவரை இப்பாதைகள் கண்கவரும் தோற்றமளிக்கும். குரங்குக் கூட்டங்கள் சாலைகளில் தாவிக் குதித்து விளையாடிக்கொண்டிருக்கும். எம்மருங் கும் சோலைகளும் செந்நெற் கழனிகளும் நந்தவனங் களும் நீர்நிலைகளும் மண்டபங்களும் தூரத்தில் மலையின் நீலநிறச் சாயலும் பார்ப்பவர் மனதையள்ளும். இவ் வழகு நிரம்பிய இடத்தில் பார்க்கப் பார்க்க வசீகரிக்கும் அழகின் சிகரமாய்த் திகழ்வது திருக்குற்றாலம்.

மலை வளம்.

இவ்வூர் கடல்மட்டத்துக்கு மேல் 550 அடி உயரத் திலுள்ளது இங்குள்ள மேற்குத்தொடர்ச்சிமலைமேற்கே 10 மைல் தூரத்திலுள்ள ஆரியன்காவுக் கணவாயி லிருந்து உயர்ந்துகொண்டே வந்து 2 மைல் அருகிலுள்ள

ஐந்தருவி முதல் 5000 அடி வளர்ந்து குற்றாலத்தைக் கடந்து தெற்கே பொதிகைமலை நோக்கிச் செல்கின்றது. இங்கே அதிக உயரமுள்ளசிகரம்'பஞ்சந்தாங்கி' என்று அழைக்கப்படுகிறது (உயரம் 5135 அடி) இச்சிகரம் நாட்டின் பிற பாகங்கள் மிகக் கொடுமையான பஞ்சத் தால் வாட்டமுறுகின்ற காலத்திலும் இவ்விடங்களில் மழைக்குக்காரணமாயிருந்து அத்துன்பம் வராமற்றடுத்து மக்களைத் தாங்குவதால் பஞ்சந்தாங்கி எனக் காரணப் பெயர்பெற்றது குற்றாலமலை உச்சியில் மூன்று சிகரங் களையுடையதால் திரிகூடமலை அல்லது திரிகூடாசலம் என்று வழங்கப்படுகிறது. அழகு, செல்வம் நிறைந்த மலையாகலான் திருகூடமலையெனக் கூறுபவர்களும் உண்டு. இம்மலையிலுள்ள காடுகளுக்குச் செண்பகக் காடு என்று பெயர்

இம்மலை ஓங்கி வளர்ந்தும் நிமிர்ந்தும் படுத்தும் வீங்கியும் மெலிந்தும்தொடர்ந்தும் ஒன்றணபின் ஒன்றுச் சேர்ந்தும் பிரிந்தும்பல்வகைத் தோற்றமளிக்கும். ஒன்று நகைக்கும், மற்றொன்று சீறும், இன்னொன்று பயமுறுத்தும், இன்னுமொன்று தன்னழகைக் காட்டும். தேக்கு, மயிலை கோங்கு. அத்தி. புன்னை. ஆல். இலுப்பை முதலிய மரங்கள் செறிந்து அடர்ந்திருக்கும் தென்னை, மா, பலா, கமுகு, வாழை, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சந்தனம், மாங்குஸ்தான் முதலிய மரங்கள் பழுத்து நறுமணம் வீசும் மல்லிகை, செண்பகம் மகிழ், முல்லை வெட்சி, பாதிரி முதலிய மலர்கள் பூத்து வருகின் றவர்களை வாவென்று உபசரிக்கும் மரக்கோப்புகளி னின்று தொங்கும் பச்சிளங் கொடிகளும் பூக்கொடி களும் இயற்கையன்னை தன்னை அலங்கரித்திருக்கின்ற அணிகலன்கள் போலத் தோன்றும். மலையின்

தலத்தில் குறுஞ்செடிகளும் சஞ்சீவி முதலான விஞ்சை மூலிகைகளும் பரந்து கிடக்கும். யானை. புலி நரி, மான் முதலிய காட்டு விலங்குகள் கவலையின்றித் திரியும், பறவையினங்கள் இசைபாடிக்கொண்டிருக்கும், மழைக் காலங்களில் மரங்களையும் மலைகளையும் ஊடுருவித் தண்ணீர் அருவிகளாய்க் குதித்து விளையாடிக் கால்களாகவும் ஆறுகளாகவும் ஓடும். இக்காலங்களில் மலையின் தோற்றம் மரகதப் (பச்சைப்) பாயில் வைரங்களைக் குவித்து வைத்ததுபோலிருக்கும். பச்சை மலை நீல வானையளாவி நிற்கும். மெல்லிய பஞ்சு போன்ற மேகங்கள் பற்பல வடிவங்களில் மலையினுச்சியில் தவழ்ந்தும் விண்ணிற்பறந்தும் விளையாடும். வெண் முகிலும் கருமுகிலும் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும். மந்திகள் குட்டிகளை வயிற்றிற் சுமந்துகொண்டு மரத்திற்கு மரம் தாவிக் கொப்புகளிலுள்ள கனிகளைச் சூறையாடிக் கடித்துக் கீழே எறியும், அக்கனிகள் தேன் பிலிற்றும். இத்தகைய காட்சிக்கிடையில் இக்காட்டிலே பிறந்து மரக்கிளையாகிய தொட்டிலிலே விளையாடி நிலத்திலே தவழ்ந்து திரியும் 'தென்றல்' என்னும் ஓர் பிள்ளை. தென்றற் காற்றை மந்தமாருதம் என்று தலபுராணங் கூறும். திருக்குற்றால வளங்களைத் திருக்குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் இவ்வாறு சித்தரிக்கிறார்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
முழங்குதிரைப் புனலருவி சழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக்கொண்டோடும்

செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
ஆடுமர வீனுமணி கோடிவெயி லெரிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்
திரிகூட மலை எங்கள் செல்வமலை யம்மே,

காட்டுக் கனியழித்துங் கான்யாறு நீர்செழித்துங்
கோட்டுக் குரங்குறையுங் குற்றாலம்.

நில வளம்.

ஆற்றில் வாளைமீன்கள் குதிக்கும். அலைகள் செம்பொன்னிற மணல் கொழிக்கும். மேதிகள் சேற்றையெல்லாங் கலக்கும். அச்சேற்றில் பூக்கள் மலரும் பூக்களினின்று சொட்டுந்தேன் நாற்றுகளில் பாயும். ஆற்றின் இருபுறமும் பசுஞ்சோலை அடர்ந்திருக்கும். வயல்கள் பாத்திகளாகப் பரந்து சூழ்ந்திருக்கும் திருவீதிகளில் திருநீறு பூசிய தொண்டர்கள் புடைசூழக் கொடிகள் வீச எப்போதும் விழாக்களின் ஆரவாரம் மலிந்திருக்கும் இவ்வூர் மக்கள் பொதுக்கழகங்கள் கூட்டித் தமிழ் மொழியைக் கற்றும் கற்பித்தும் ஆராய்ந்தும் மொழி வளம் பெருக்குவார்கள்.

ஆறெலாங் குதிக்கும்வாளையலையெலாங்கொழிக்குஞ்செம்பொன்
சேறலா முழக்கு மேதி செய்யெலா முகிழ்க்கு நீல
நாறெலாவளர்க்கும் பூந்தேன் நாடெலாம்வளர்க்குஞ்செங்கோல்
சாறெலாம் வளர்க்கும் வீதி தமிழெலாம் வளர்க்கும்
மன்றம்—தலபுராணம்.

இவ்வருங் காட்சிகளை இன்றுங் கண்கூடாகக் காணலாம்.

ஆறும் அருவியும்.

இங்கே பாய்கின்ற நதிக்குச் சிறிய ஆறு என்று பொருள்படுஞ் சிற்றாறு என்று பெயர். பெயர் சிற்றாறு எனினும் பெருமை மிக்கது.

‘ சிற்றாறென்பது பெற்றாலும் ஓரு
சிறியவர் மனப் பெருமைபோல்
சித்ரா நன்னதி பெருகிவார
சித்ரம் பாரும் பள்ளீரே ’

என்று முக்கூடற் பள்ளு ஆசிரியர் புகழ்கின்றார் ஓவிய அழகுள்ள ஆறு என்று பொருள்படும் சித்திராநதி என்றழைப்பது புராண வழக்கு. இந்த ஆறு, திரிகூடமலையிற் பிறந்து மலையின்மேல் முதன்முதலில் 100 அடி உயரத்திலிருந்து பூப்போலச் சொரிந்து விழுகின்றது. இந்த வீழ்ச்சிக்குத் தேனருவி என்று பெயர்-தேன் போன்று மெல்லிய ஒழுக்குடையதாய் காண இனிமையதாயிருப்பதாலும் இப்பக்கத்தில் தேன் கூடுகள் மிகுதியாகக் கிடைப்பதாலும் இப்பெயர் வந்தது. மலையடியிலிருந்து சுமார் 3 மைல் தூரத்திலுள்ளது. இங்கே இயற்கையணங்கு தன் அழகையெல்லாந் திரட்டியலங்கரித்துத் தன்னைக் காண்பவர்களையெல்லாம் மயக்குகின்றாள்.

இதற்கு $1\frac{1}{2}$ மைலுக்குக் கீழே இந்த ஆறு செண்பக அடவி என்னுமிடத்தில் 30 அடி உயரமுள்ள அருவியாக

விழுகின்றது. இறுதியில் குற்றாலத்தில் 288 அடி உயரத்திலிருந்து குதிக்கின்றது. 288 அடி தூரமும் ஒரே வீழ்ச்சியாய் விழாமல் மத்தியில் ஒரு துறையில் விழுந்து பொங்கிப் பரந்து விரிந்து கீழே விழுகின்றது பொங்கி மேலெழுங் காரணத்தால் இத்துறை பொங்குமா கடலென்றும், முதலில் மலையினின்று குதிக்குமிடம் மா மரங்கள் அடர்ந்த காடானதால் மாவடித்துறையென்றும் வழங்கப்படுகின்றன கீழே விழுகின்ற இடத்தில் இந்த அருவியை 'வற்றுத வடஅருவி' யென்று தலபுராணம் புகழும் அருவி விழுமிடமெல்லாம் பாறைகளிற் சிவலிங்கங்கள் காட்சியளிக்கின்றன

அருவியில் நீராடுகின்றவர்கள் வசதிகளைக்கவனிக்க அருவிச்சங்கம் ஒன்று ஏற்பட்டு அரசாங்க அநுமதி பெற்று நல்ல வேலை செய்து வந்தது. இச்சங்கம் இப்போது நகராட்சிக் குழுவுடன் (டவுண்ஷிப் கமிட்டி) இணைக்கப்பட்டுவிட்டது முன்னிருந்த அருவிக் கட்டம் வழுக்குப் படிந்து சரியான பாதுகாப்பு இல்லாமல் சிற்சில உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டமையால் இதைத் தடுக்க இந்த மாவட்ட முன்னாட் கலெக்டர் A. M. C. காலட்டி துரையவர்கள் ஊக்கத்தாலும் கானாடு காத்தான், S. A அண்ணாமலைச் செட்டியாரவர்கள் போன்ற பரந்த நோக்கமுடைய வள்ளல்களின் பொருளுதவியாலும் அருவியினடியில் ஓர் மேடை அமைக்கப் பட்டுப் பாதுகாப்புக்காக இரும்புக்கம்பி அளிகள்போடப் பட்டிருக்கின்றன. முன் 20 பேர் பயமின்றிக் குளிக்க முடியாத இடத்தில் இப்போது ஒரே காலத்தில் சுமார் 200 பேர் மன அமைதியுடன் குளிக்க வசதி அமைந்திருக்கின்றது பெண்கள் தனியாய் மறைவுடன் குளிக்கவும் வசதியமைந்திருக்கிறது குளிக்கும்

போது ஆடைமுதலியவற்றைவைத்துக்கொள்ளவும்பின் அணிந்துகொள்ளவும்அருவிச்சங்கத்தார், கோயம்புத்தூர் ராவ்பகதூர் திரு. கோபால நாயுடு அவர்களின் தாராளமான பண உதவியினுல் அருவிப்பக்கத்தில் பல அறைகள் கட்டி அவைகளை எளிய வாடகைக்குக்கொடுத் திருக்கின்றனர் திருப்பூர் திருவாளர் K. பெருமாள் செட்டியார் அவர்கள் உதவியால் பெண்மக்கள் இலவச மாய்த் தங்க ஒரு கல் மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

அருவியினடியில் நீந்தி விளையாடுவதற்கேற்ற ஒரு சிறு தடாகமிருக்கிறது. இக்குளத்தைக் கடந்து வடவரு விக்குச் செல்ல. கீழ்பக்கமாய் ஓர் கற்பாலம் இருக்கிறது. நதி பாறைகளில் மோதியுந் தவழ்ந்துஞ் செல்கின்ற வழியில் சந்தியாவந்தனம், நித்தியானுஷ்டானம், சிவ பூஜை முதலியன முடிப்பதற்குறிய மண்டபங்களும் படித் துறைகளும் ஆற்றை அழகு படுத்துகின்றன அருவிப் பக்கத்தில் கோயிலார் மண்டபமும் சில அறைகளும் எதிரே தீர்த்தவாரி மண்டபமும் இருக்கின்றன கங்கை யாகிய அருவிக்கும் பாறைகளிலுள்ள சிவலிங்கங்களுக் கும் அன்ருடகப் பூசை ஒழுங்காக நடந்து வருகின்றது

இந்த அருவியின் தோற்றமும் சூரவையும் நம் மனதை ஈர்க்கும் சற்றே உலகக் கவலைகளை மறைத்து மன அமைதியைக் கொடுத்து ஒருவித உயர்ந்த நிலையில் புகுத்திவிடும் இவ்வளவு நற்குணங்கள் நிறைந்த நீரோட்டத்தின் அழகையும் அதனை அலங்கரிக் கும் மண்டபங்களின் நோக்கத்தையும் உணர்ந்து 'ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம் — ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்' என்று திருக்குற்ருலக்

குறவஞ்சி ஆசிரியர் புற அழகையும் அக அழகையுங் கூட்டிப் புளகிக்கின்றார்.

ஐந்தருவிப் பாதையில் மலைமேல் சற்றே ½ மைல் தூரத்தில் சிற்றருவியென்று ஓர் அருவியுண்டு. இங்கே காட்டு இலாக்கா அதிகாரிகள் அனுமதியின்றிச் செல்ல முடியாது. மேற்கே இரண்டுமைல் தூரத்தில் சிற்றாற்றின் ஓர் பிரிவு ஐந்து அருவிகளாக விழுகின்ற காட்சி கண்டு இன்புறத்தக்கது. இதற்கு ஐந்தருவியென்று பெயர். ஐந்து தலையருவியென்றுங் கூறலாம். நல்ல கற்பாதை உண்டு மக்கள் சமையல் செய்துகொள்ள வசதியாய் ஒரு பெரிய பாறை பந்தல்போல் நின்று நிழல் கொடுக்கும் இதற்கு அடுக்களைப் பாறை என்று பெயர். அருவியில் மககள் வழுக்கி விழாமல் மன அமைதியுடன் நீராடப் படிகள் கட்டி, தளங்கள் புதிதாக அமைக்கப் பட்டும், பாதுகாப்புக்காக இரும்புக் கம்பி அளிகள் போடப்பட்டுமிருக்கின்றன இங்கும் ஆடைகள் வைத்துக் கொள்ளவும, அணியவும அறைகள் உண்டு.

திருக்குற்றாலத்தின் கிழக்கே ¾ மைல் தூரத்தில் இவ்வாற்றின் ஒரு கால்வாய் அருவியாக விழுந்தோடு கின்றது இதற்குப் பாசுபத சாஸ்தா அருவியென்று பெயர். சாரற் காலத்தில் வடவருவியில் எப்போதும் மக்கள் கூட்டம் நிறைந்திருக்குமாதலால் அநேகர் குளிப்பதற்காக இங்கே செல்வது வழக்கம். இதன் கிழக்கே பழைய குற்றாலம் இருக்கிறது இங்கு அருவி யாய் விழுகின்ற நதிக்கு அழகனாறு என்று பெயர் இது கொஞ்ச தூரத்தில் சிற்றாற்றுடன் கலக்கின்றது. இங்குள்ள காட்சியும் மிக வனப்பாயிருக்கும். நீராடுவதற்கு இதுவும் ஒரு சுகமான இடம்.

செண்பக அடவியிலுள்ள அருவி, தேனருவிகளுக்குப் பாதித்தூரம் வரை நல்ல பாதைகள் உண்டு குறுக்குப் பாதைகளும் உண்டு. பாதித்தூரம் ஓரடித்தடமான காட்டுப்பாதையாயிருக்கும் ஆயின் இச்சோலைப்பாதை வழி நண்பர்களுடன் செல்ல உற்சாகம் உண்டாகும்.

திருக்குற்ருலம் ஆரோக்கிய தலம்

திருக்குற்ருலம் புகழ்பெற்ற ஒரு புண்ணிய தலமட்டு மல்ல. உடல் நலத்தைப்பேணும் ஓர் அரிய தலமுமாகும் இவ்வூரின் தட்ப வெப்ப நிலைமை உடல் நலம் பேணு தற்கும் வளர்த்தற்கும் நன்ருகப் பயன் படுகின்றது சோலை சூழப் பெற்றிருப்பதால் சூரிய வெப்பம் கடு வேனிற் காலத்திலும் குறைந்தே காண்கின்றது.

மேடைத்தளமு மதிள்மென் கொடியுஞ் செங்கதிரோன்
கோடைக்கு வாடைதரும் குற்ருலம்

என்பது இவ்வூரின் இயல்பு இவ்வூர் இருக்குமிடமும் தட்ப வெப்ப நிலைமையும் உடல் நலத்துக்கேற்றவாறு அமைதற்கு அநுகூலமாயிருக்கின்றது மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள பெரிய வெளியாகிய ஆரியன காவுக்கணவாய் பக்கத்திலிருப்பதால் அக்கணவாய்க்கு மேற்பக்கம் எழுகின்ற தென்மேற்குப் பருவக்காற்றும் மழையும் (South West Monsoon) அக்கணவாய் வழியே வீசி கீழ்ப்பக்கத்திலிருக்கின்ற குற்ருலத்தில் இளங் காற்ருகவுஞ் சிறுமழையாகவும் அமைகின்றன இக்காற் றைச் சாரற்காற்றென்றும் மழையைச் சாரல் என்றும் கூறுவார்கள் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில்

இந்த மாவட்டத்திலுள்ள மற்றப்பாகங்கள் காற்றும் மழையுமின்றி வருந்தும்போது இங்கே இந்த நல்ல காற்றும் இளமழையுங் கிடைக்கின்றன. மழை பெய்தாலும் பெய்யாவிடினும் இக்காலக் கருமேகங்களினூடே பச்சை மரங்கள், கொடிகள், செடிகளை முகந்து வீசுகின்ற காற்றானது சூரிய வெப்பத்தை 15 மாத்திரை (degree) வரை குறைத்து மனதுக்கு ரம்மியமானதும் உடலுக்கு உகந்ததாகவுமுள்ள ஒரு அரிய தட்பவெப்ப நிலையைக் கொடுக்கின்றது. புயற்காற்றுமின்றி மணற்காற்றுமின்றி இனிமை பொருந்திய தென்றற் காற்றுடன் வீசி மக்கள் மனதைப் பரவசப்படுத்துகின்றது. இக்காலத்தை (ஜுன்-செப்டம்பர்) சாரற் காலம் என்று அழைப்பது இப்பக்க வழக்கு.

சாரல் என்பது தென்றலுடன் கூடிய தூறல் அல்லது நுண்துளி. " கூதல் மாரி நுண்டுளி தூங்கும் குற்றாலம் " என்பது தேவாரம். நுண்துளியாகிய சாரல் மழை தனித்தும் சில நேரம் வெயிலுடனும் சில நேரம் இளங் காற்றுடனும் இன்னுஞ் சில நேரம் இவ்விரண்டுடன் கலந்தும் பெய்யும். இம்மலயந்தருங் காற்று உடல் வெப்பம் மாற்றிக் குளிர்ச்சி கொடுக்கும் சாரல் மழை ஒவ்வொரு வருடமும் தவறாமல் வைகாசி 15உ ஆரம்பமாகும் இதை இடவப்பாதி மழையென்று கூறுவதுமுண்டு (இடவம் - ரிஷப மாதம் - வைகாசி) இம் மழைக்கு முன்னறிகுறியாய் சித்திரைமாதமுதல் மேல் காற்று கிளம்பிச் சீறி அடிக்கும். இக்காற்றின் சீற்றத்தினளவே சாரல் மழையின் மிகுதியும் குறையும் அமையும் " சித்திரை பத்தில் சிறந்த பெருங்காற்று " என்று இவ்வூரில் ஒரு பழமொழி கூறுவார்கள்,

இக்காலத்தில் அருவியில் குளிப்பதால் மக்களுடல் நிலை நல்ல பயன் எய்தும். உடலைப்பற்றிய நோய், தோலைப்பற்றிய நோய், மூளையைப்பற்றிய நோய்களும் தீரும். பசியுண்டாகும், உடல் வலுக்கும் உற்சாக மேற்படும் அருவியிலிருந்து பிராணவாயு (Oxygen) அபசங்கள் அதிகமாய் அடங்கிய ஒருவித பூங்காற்று ஓஸோன் (Ozone) வீசிக்கொண்டிருக்கும். இக்காற்று உடல் நலத்துக்கு மிக மிக அநுகூலமாயுள்ளது கடற் கரைப் பட்டினங்களிலுள்ளவர்கள் இக்காற்றின் அருமையை நன்கறிவார்கள் அருவி நீர் வழியெல்லாம் காடுகளில் நிறைந்த மூலிகைகளைத் தழுவி வருவதால் அம் மூலிகைகளின் குணங்களும் நீரிற்கலந்து கிடைக் கின்றன அருவி நீரின் வேகம் மின்சார அணுக்களைத் தோற்றுவிக்கின்றது இத்துடன் காலையில் சூரியனுடைய ஊதாக் கதிர்கள் (Ultra violet rays) வீசுகின்றன இவைகள் சேர்ந்து உடல் நலத்தை வளர்ப்பதற்குக் காரணங்களாகின்றன

இவ்வருவி சாரற்காலத்திலும் ஐப்பசி கார்த்திகை மழை காலத்திலும் அபரிமிதமாயும் மற்றக்காலங்களில் குறைந்தும், மிகக் குறைந்தும் விழுந்துகொண்டிருக்கும். சாரற்காலத்தில் மலைமேலும் தரைமட்டத்திலும் உள்ள சாலைகளில் உலாவித் திரிந்து அருவியில் நீராடி உணவு கொள்ள இனிமையாயிருக்கும். இது ஒரு தனித்த அனுபவம் உடல் நலத்துக்குச் சிறந்த அடிகோலி

1811-ம் வருடத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியார் நியமித்த மருத்துவக்கமிட்டி வடவருவியைப்பற்றித் தெரிவித்திருப்பதாவது: இந்த விசித்திரமான இடத்தில்

நோயாளிகள் குணமடைந்து உடல் நலம் பெறுவதற்கு முக்கிய காரணம் இங்கேயுள்ள சின்ன அருவியாகும். இந்த அருவியில் ஐரோப்பியர்கள் அன்றாடகம் குளித்து வருகின்றனர் பாறையின் இயற்கை அமைப்பால் இந்த அருவி பிரிந்து பரந்து தலைக்குமேல் 13, 14 அடி உயரத்திலிருந்துதான் விழுகின்றது. பூரா அருவியும் மலை உச்சியினின்று கீழேவரை ஒரே அருவியாய் விழுவதில்லை. அருவிக்குள் நுழைந்ததும் முதன்முதல் திடுமென ஒரு நடுக்கல் உண்டாகிறது இதன்பின் சொல்லமுடியாத ஒருவித இன்பம் பிறக்கிறது. அருவியின் வேகம் தேகத்தில் தாக்குவதால் இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தி உடம்பு முழுவதும் ஓர் பூரிப்பைக் கொடுக்கிறது தவிர சோம்பலைக் கெடுத்து உற்சாகத்தைக் கொடுத்துப் பசியைக் கிளப்பி சீரணத்தைச் சரிசெய்து பலவித நன்மைகள் செய்கின்றது நாங்கள் அறிந்த வரையில் வேறு எவ்வித நீராடலும் இவ்வளவு அதிகமான நன்மை பயப்பதில்லை. இந்த நல்ல அருவியும் இன்புறத்தக்க தட்ப வெட்ப நிலையுஞ் சேர்ந்து இங்கு வருகின்றவர்கள் இயமன் வாய்போகுந் தருவாயிலிருப்பவர்களாயினும் அவர்களுக்குப் புத்துயிர் கொடுத்து மீட்டுகின்றன."

பாதிரியார் கால்ட்வெல் துரை தான் எழுதிய திருநெல்வேலி மாவட்ட வரலாற்றில் "இந்த அருவி மிகக் கீர்த்தி வாய்ந்தது. ஐரோப்பியர்களும் இந்துக்களும் வெவ்வேறு காரணங்களினால் இதில் குளிக்க ஆசைப்படுகின்றனர் குற்றாலம் உலகத்திலேயே மிகச் சிறந்த நல்ல தண்ணீர் ஸ்நானக்கட்டமென்றால் மிகைபடக்கூறுவதாவது" என்று வரைந்திருக்கின்றார். சுருக்க வரலாறு எழுதிய ஸ்டுவர்ட் துரையும் 'குற்றாலத்தருவி

பாவங்களைப் போக்குவதென்று இந்துக்கள் அதைப் புகழ்கின்றனர். மனக்களிப்புடன் நீராடத் தகுந்த இடமாதலால் ஐரோப்பியர் பெருமைப்படுத்துகின்றனர்" என்று குறிப்பிடுகின்றார்.

திருக்குற்றாலம் பண்டைத் தமிழர்களால் ஒரு க்ஷேத்ரமாகவே கருதப்பட்டதென்றும் ஆங்கிலேய அரசு தலையெடுத்த பின்னர் ஐரோப்பியர்கள்தான் முதன் முதலில் இவ்வூர் ஓர் அருமையான ஆரோக்கிய தலமென்று உணர்ந்தனர் என்றும் முற்காலத்தில் ஐரோப்பியர்களும் சிவில் அதிகாரிகளும் ராணுவ அதிகாரிகளும் வீடுகள் கட்டி அடிக்கடி இங்கு வந்து நீண்ட நாட்கள் தங்குவது வழக்கமென்றும் பின்பு இந்திய மக்களை ஐரோப்பியர்களைப் பின்பற்றி அநேக கட்டடங்கள் கட்ட ஆரம்பித்து விட்டதால் ஐரோப்பியர்கள் அதிகமாக வருவதில்லை என்றும் Mr H. R. பேட் (ஐ.ஸி.எஸ்.) தாம் எழுதிய (Gazetteer of Tirunelveli) திருநெல்வேலி மாவட்ட சரித்திரத்திற் கூறியிருக்கின்றார் ஐரோப்பியர்களே முதன் முதல் உடல் நலங் காரணமாக இங்கு வந்ததால் பெல்ஜிய நாட்டிலுள்ள ஸ்பா என்னும் ஆரோக்கிய ஸ்தலம் போன்று நீர்வளம் நிரம்பி உடல் நலம் கொடுக்குந் தலமென்று இவ்வூரைவியந்து தென்னாட்டு ஸ்பா என்ற புனை பெயரிட்டனர் (famous SPA of the south) இயற்கை அழகைக்கண்டு மகிழ்ந்து அழகின் உறைவிடம் (beauty spot) என்றும் புகழ்ந்தனர்.

வேறு பெருமைகள்

குற்றாலத்தின் பெருமை இயற்கை அழகுமட்டுமல்ல, தாவர நூல் கற்கின்றவர்களுக்கும் வேட்டையாடுகின்

றவர்களுக்கும் குற்றலம் ஏற்ற ஊர். பலவகைத் தாவரங்களையும் விலங்குகளையும் காணலாம். 1835-ம் வருடத்தில் டாக்டர் வைட் என்பவர் இந்த மலை வட்டாரத்தைச் சுற்றிப் பார்த்து ஆராய்ச்சி செய்ததில் 2000 விதமான பூச்செடிகளும் 2000 விதமான இதர பச்சிலைச் செடிகளும், மூலிகைகளும் அகப்படுகின்றனவென்று கணக்கெடுத்திருக்கின்றார் மலையில் மிளாவும் (sambhur), மலை ஆடும் (ibex) மலிந்து கிடக்கின்றன புள்ளிமான்களையும் காணலாம். யானையும் புலியும் வருவதுண்டு. பன்றி, முள்ளம்பன்றி, காட்டுக்கோழிகளை எக்காலத்திலும் எல்லா இடத்திலும் பார்க்கலாம்.

1795-ம் வருடமுதல் கிழக்கிந்திய வியாபாரக் கூட்டத்தார் மொலுக்கஸ் தீவிலிருந்து சாதிக்காய், ஏலக்காய், கிராம்பு, அதிமதுரம முதலியன வருத்திப் பயிரிட்டனர். காப்பிச்செடியும் தேயிலையும வளர்த்தனர். ஆயின் சரக்குகள் நயமின்றி ஒன்ருவது இலாபம் கொடுக்கவில்லையாதலால் அத்தோட்டங்களை விலைக்கு விற்று விட்டார்கள். அருவிக்கரைத் தோட்டம், தெற்கு மலைத் தோட்டம், உஞ்சக்கட்டி உதயம், சின்ன ராமக்கல், குளிராட்டி முதலிய தோட்டங்கள் விலையாய் விட்டன. இங்கே ஆரஞ்சு, தென்னை, கமுகு, வாழை, பலா, எழுமிச்சை பம்புளிமாசு முதலியன விளைகின்றன. முன்னைய சென்னை மாநில மாஜிஸ்ட்ரேட் திரு. அப்பாஸ் அலியாருக்குச் சொந்தமான தெற்கு மலையில் சாதிக்காய், ஏலக்காய், கிராம்பு, மாங்குஸ்தான் முதலியன கிடைக்கும். இத்தோட்டத்தைப் பார்க்க ஆநேகர் செல்வதுண்டு. வழியெல்லாம் மலை வளங்களைக் கண்ணுற்று

அனுபவிக்கலாம் ஹோப், மரிகா, வாசுதேவத் தோப்புகள் அரசாங்க ஆளுகையிலிருக்கின்றன

பொதுவாகக் கூறுமிடத்து திருக்குற்ருலத்திலுள்ள இயற்கையின் கவின்பெரு வனப்பும் கண்கொள்ளாக் காட்சியும் அறிவுடன் காண்பவன் ஒவ்வொருவனையும் கவிஞனுக ஆக்கிவிடும். உண்மைப்புலவன் இவ்வளம்படு வனப்பில் ஈடுபட்டுத் தன்னனுபவங்களை உயிர்ததும்புங் கவிகளாய்ப் பொழிவான். தவிர இக்காட்சி உயிர்களின் சிறுமையும் நிலையாமையும் இறைவனின் பெருமையும் உண்மையும் உணர்த்திக்கொண்டே இருக்கும். மலைகளை இறைவன் உறைவிடங்களென்றும் அருவி அவன் தோற்ற மென்றும் அருவி வெள்ளம் அவன் கருணை வெள்ள மென்றும் தமிழன் இன்றும் பாராட்டுகின்ருன். ஆகலின் உலகப் பற்றுக்களை யொழித்து மனதை ஒருவழிப்படுத்தி யோகசாதனை செய்வதற்கும் கல்வியறிவைப் பெருக்கு வதற்கும் பொருத்தமான இடம் இதுவே

இம்மலை வளங்களையும் வனப்புக்களையும் அநு பவித்துப் புகழ்ந்து பதிகங்கள் பாட ஒரு திருஞானசம் பந்தர் வேண்டுமாயின் இதன் சால்புகள் எத்துணைப் பெற்றிவாய்ந்தது என்றியம்புதல் இயலாதன்றெ !

இத்துணை நலன்கள் அமைந்த இவ்வூரில் சாரற் காலத்தில் தமிழ்நாட்டின் பல பாகங்களினின்றும் அதற்கு வடக்கிருந்தும் பலதுறையிலுள்ள பெருமக்கள் விரைந்து வந்து அருவியில் நீராடுவதால் சாரற்காற்ருன தென்றல் தங்கள்மேல் வீசுவதாலும் மனோகரமான இயற்கைக் காட்சிகளைக்கண்டு களிப்பதாலும் தங்கள்

கவலைகளை மறந்து உடல் நலம் பெற்று மன நலம் பெருகி வாழ்கின்றது ஓர் வியப்பாமோ?

ஜனத்தொகை.

இந்த ஊர் சுமார் 3000 மக்கள் அடங்கிய ஓர் சிற்றூர் திருக்குற்ருலமும் கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபாரப் பிரதிநிதி காசாமேஜர் (Casamajor) துரை பேரால் உண்டானதுமான அதன் வடபாலுள்ள சிற்றூராகிய காசிமேசபுரமுஞ் சேர்ந்து அரசாங்கக் கணக்குகளில் குற்ருலக் கிராமம் என்று வழங்குகிறது. குற்ருலத்தில் மட்டும் ஜனத்தொகை மிகச்சொற்பம். சுமார் 40 வருடங்களுக்குமுன் நிலையாக இங்கு வசிக்கும் மக்கள் கிடையா. இப்போதுதான் சிலகாலமாக இவ்வூர் அருமையை அறிந்த சில பெரியார்களும் உபகாரச் சம்பளம் (pension) பெறுஞ் சில பெரிய அலுவலர்களும் பலவித இல்லங்கள் கட்டி நிலையாகவும், தற்காலிகமாகவும் வாழ்ந்து வருகின்ருர்கள்.

தங்குதற்குரிய வசதிகள்.

வெளியூரிலிருந்து வருகின்ற மக்கள் தங்குவதற்கு ஏற்ற இடங்கள் ஏராளமாய் இருக்கின்றன கோயிலார் அநேக கட்டடங்கள் கட்டி வாடகைக்கு கொடுக்கின்றனர். சன்னதி வீதியில் பல அறைகள் கொண்ட ஓர் நீண்ட 2 மடிக் கட்டடம் அமைக்கப் பெற்றிருக்கிறது இக்கட்டடம் குற்ருலநாதர் தேவஸ்தானத்திலிருந்து கட்டப்பட்டு "அகஸ்தியர் லாட்ஜ்" என்ற பெயர் சூட்டப்பெற்று கம்பீரமாய் விளங்குகின்றது.

திருவாவடுதுறை, தர்மபுரம், பெருங்குளம் முதலிய ஆதீனகர்த்தர்களுடைய மடங்களும் உண்டு. திருநெல்வேலி வயிரவன் பண்டாரம் கட்டிய திருநாவுக்கரசு மடத்திலும் தங்கலாம். சொக்கன்பட்டி ஜமீன்தார்கள் சின்னணஞ்சத் தேவர் கட்டிய சத்திரமும், எதிரே வலங்கைப்புலித் தேவர் கட்டிய வலங்கைப்புலி விலாச மண்டபமும், குற்றாலம் டவுண்ஷிப் கமிட்டியின் ஆட்சிக்குட்பட்டு ஜனங்களுக்குத் தங்குமிடம் அளிக்கப் படுகிறது. இதற்கு மேல்புறம் 16 அறைகள் கொண்ட கட்டடமுஞ் சற்று கிழக்கே ஆற்றை நோக்கி இருக்கும் பிரயாணிகள் விடுதியும் தினசரி வாடகைக்குக் கிடைக்கும் இலஞ்சிக்குப் போகிற பாதையில் ஸ்ரீலஸ்ரீ மௌனானந்த சுவாமிகள் ஸ்தாபித்திருக்கின்ற தத்தாத்ரேய மடத்திலும் சில பிரயாணிகள் தங்குவார்கள் இவை தவிர சேனையர் மடமும் வேறு பல மடங்களும் இருக்கின்றன. தோட்டமுஞ் சுற்றிடமும் நிறைந்த வீடுகளும் தனிச் சிறு கட்டடங்களும் குடிக்கூலிக்கு அகப்படும் சாரற்காலத்தில் தங்குமிடங்கள் (lodging houses) சில திறக்கப்படும். ஆதியில் ஐரோப்பியர்கள்தான் வீடுகள் கட்டினர். " திருவாங்கூர் வீடு " (Travancore House) திருநெல்வேலிமாவட்ட முதல்கலெக்டராகிய லூஷிங்டன் துரையாலும், திருவாங்கூர் மகாராஜாவின் மாளிகை சென்ற நூற்றூண்டில் உதவிக் கலெக்டர் ஷேக்ஸ்பியர் துரையாலும், ஜகந்நாதராயரின் பெரிய வீடும், கண்ணாடி வீடும், கி பி 1816-ல் முறையே கிழக்கிந்திய கம்பெனி யாரின் ஆட்களாகிய ஜான்சலிவன் துரையாலும் ஹியூஸ் துரையாலும் கட்டப்பட்டவையென்று தெரிகிறது. பிற் காலத்தில் ராமநாதபுரம், சிங்கம்பட்டி. எட்டையாபுரம, சேத்தூர், தலைவன்கோட்டை, சிவகிரி முதலிய குறுநில

மன்னரும் பிறரும் அநேக வீடுகள் நவீன முறையில் அழகாக அமைத்திருக்கின்றனர். சுகாதாரம் பொருந்தி உண்ண நல்லுணவும், இருக்க நல்லிடமும் கிடைக்கும் அழகிய விடுதி ஒன்று புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவ மிஷன் பங்களா ஓர் குன்றின் மேல் இருக்கின்றது. யாத்ரீகர் வசதிக்காக ஒரு புதிய பெரிய இல்லம் மலையின் மேல் அரசாங்கத்தாரால் கட்டப்பட்டிருக்கின்றது.

தல ஆட்சியும் வசதிகளும்.

சில வருடங்களுக்குமுன் இவ்வூரில் நகரபரிபாலன சபை (பஞ்சாயத்து) நிறுவப்பட்டிருந்தது இப்போது அதற்குப் பதிலாக எண்மர் அடங்கிய ஓர் நகராட்சிக்குழு (டவுண்ஷிப் கமிட்டி) சட்டப்படி சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிறது தலைவர்: மாவட்ட கலெக்டர். உறுப்பினர்; மாவட்ட பொறி இயல் அதிகாரி, மாவட்ட மருத்துவ அதிகாரி, மாவட்ட சுகாதார அதிகாரி, மாவட்ட காட்டிலாக்கா அதிகாரி, அதிகாரப் பற்றற்ற மூவர்கள் திரு. A. R. சுப்பையா முதலியார் M. L. A, திரு S. சட்டநாதக் காரையாளர் M. L A., குற்றாலநாதர் திருக்கோயில் ஆட்சித் தர்மகர்த்தர் திரு P. K. S. சங்கர முதலியார் பொதுமக்கள் நன்மைக்காக ஒரு ஒலிபரப்பி (Radio) யும், நல்ல புத்தகங்கள் அடங்கிய படிப்பகமும் வைத்திருக்கிறார்கள் வீதிகளில் மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்தருவிப் பாதையிலும் மின் விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன மாலை நேரத்தை உல்லாசமாய்க் கழிக்க ஒரு பூங்காவும் விளையாட்டு மைதானமும் மிருகக் காட்சியும் அமைக்கப்